C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்




# மன்னா..

பொழிவு : 15 JULY' 2023 ஆகாரம் : 06

## என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே

சங்கீதம் 103:2



## BLESS THE LORD, O MY SOUL, AND FORGET NOT ALL HIS BENEFITS

- PSALM:103:2

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 01-SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| 01-SAT<br>7.30 PM<br>9.00 PM | 1 ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4 TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |
| 31-MON<br>11.30 PM<br>12.30 PM | MONTH END SERVICE<br>@ PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER |



# From the Pastor's Desk

அன்பிற்கினியவர்களே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள் .புதிய ஆயராக குடும்பமாக எங்களின் வருகையையும் ஆண்டவரின் திருப்பெயரில் ஸ்தோத்திரங்களையும் தெரிவிக்கிறோம்.

**"நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன்".**

**– சங்கீதம் 119: 94**

**" I am thine, save me; for I have sought thy precepts."**

**- Psalm 119: 94**

கடவுள் நமக்கு அருளித் தந்துள்ள விலை மதிப்பில்லாத செல்வங்கள்(TREASURE) அல்லது அருள் ஆசிகள் ஏராளம். அவற்றுள் திருமறையே (HOLY BIBLE) விலையேறப்பெற்றது. நமக்கு வாழ்வாக வழியாக முக்காலத்தும் திருமறை திகழ்கிறது. இங்கிலாந்து நாட்டில் தனது எழுத்துக்களால் பெரிய புரட்சியை ஏற்படுத்தினவர் சர். வால்டர் ஸ்காட் ஆவார். அவர் தம் மரணப் படுக்கையில் இருக்கும் போது, தம் மகனை அழைத்து புத்தகம் என்பதற்கு தகுதியானது வேத புத்தகம் மட்டுமே அதனை எடுத்து வா என்று சொல்லி அதனுள் யோவான் 14 ஆம் அதிகாரத்தை படிக்கச் சொல்லி இந்த வசனங்கள் எத்தனை ஆறுதலாய் உள்ளது என்று கண்ணீரோடு கூறிக் கொண்டே அவர் மறுமைக்குள் பிரவேசித்தார். அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டில் இருந்து ஒழுகும் தெளித்தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. சங்கீதம் 19 :10. பிரியமானவர்களே, திருமறை சார்ந்து ஆண்டவரின் கேள்விகள் சிலவற்றை ஆய்வோம். சிந்திப்போம், அவற்றுக்கான விடை காண முயல்வோம். திருமறையில், ஆண்டவரின் முதல் கேள்வி ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? (ஆதியாகமம் 3:9) ஆதாமின் பதில் என்னை ஒளித்துக் கொண்டேன் என்றார். ஆண்டவர் ஆதாமிடத்தில், உண்ண வேண்டாம் என்று நான் கூறின கனியை உண்டாயோ என்று அங்கலாய்க்கிறார்.

இதிலே ஆதாமின் "கீழ்ப்படியாமை" தெளிவாகிறது. இன்றைக்கு ஆண்டவர் மனிதரிடத்தில் எழுப்புகிற கேள்வி நீ எங்கே இருக்கிறாய் ஆதாமுக்கு பதிலாக உங்கள் பெயரை எழுதி ஆண்டவருக்கு பதில் என்ன சொல்ல முடியும் சிந்தியுங்கள். கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால் சரியான பதில் கூற முடியும், இல்லை எனில் அந்தோ பரிதாபம். வாழ்க்கையிலே உலகிற்குள்ளாய் உன்னை ஒளித்துக் கொண்டாயோ? அல்லது ஆண்டவரின் திருமறை வெளிச்சத்தில் வாழ்கிறாயோ? திருமறை வெளிச்சத்தில் வாழ்ந்தால் ஆண்டவர் உடன் பயணிப்பார். அன்று, ஏதேனிலே ஆதாம் தன்னை ஒளித்துக் கொள்ளாத வரை, ஆண்டவரோடு உரையாடினார், உறவாடினார். (ஆதி 3:8) எத்தனை மகிழ்வான அனுபவம் அது. ஆண்டவரின் கேள்வி ஏவாளிடத்தில்,"நீ இப்படி செய்தது என்ன?" (ஆதி 3:13) சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்று ஏவாளின் பதிலாக இருந்தாலும், அங்கேயும் ஆண்டவரின் வார்த்தைக்கு "கீழ்ப்படியாமை" என்பதே வெளிப்படுகிறது. இன்றைக்கும் செய்த தவறுகளுக்கு காரணங்கள் பல கூறலாம். ஆனால் அவைகள் அல்ல அதற்கான பதில்கள். ஆண்டவரின் எச்சரிக்கை அவர்தம் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதே "கிறிஸ்தவ வாழ்வு "ஆகும். மனக்குலத்தின் வாழ்வு முறை இந்த காலங்களிலே சுயம் சார்ந்து, சுயநலத்தோடு தனக்கானதை நாடி, தேடி, ஓடி வாழுகிற நிலை. அதனால் கடவுளை விட்டு தூரம் போகிற அன்று ஆதாம், ஏவாள் ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படியாததினால் அந்தோ பரிதாபம். ஆண்டவர் தம் சாயலான மனிதர் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்கு தோல் உடையை உண்டாக்கி உடுத்தினார் (ஆதி 3:21). படைப்பின் மகுடமாக (THE CROWN OF CREATION) படைக்கப்பட்ட மனிதர் கீழ்படியாமையினாலே ஏதேனில் இருந்து துரத்தப்பட்டனர் (ஆதி 3:24) எனவே, ஆண்டவரின் திரு வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்வோம். இறை அருள் பெறுவோம், ஆண்டவர் ஆசீர்வதிப்பார், ஆமென். கேள்விகள் தொடரும்..... விடை காணுவோம், வாழ்வோம்.....

**நன்றி !**

**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**அன்புடன்**

*Rev. S.Baktha Thiyagarajan*





# சூனேமியாள்

II இராஜாக்கள் 4:8 – 37

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை அன்பர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு யோசுவா தலைமையில் கீழ் கானானுக்குள் எல்லைகள் பிரித்துக் கொடுக்கப்பட்ட போது, நான்காம் சீட்டு இசக்கார் புத்திரருக்கு விழுந்தது. அதில் கிடைத்த எல்லைகளில் ஒன்று சூனேம் ஆகும் (யோசு 19:18)

**செழிப்புடன் வாழ்ந்தவர் :**

செழிப்பு மிக்க பெண் ஒருவர் குடும்பமாக சூனேம் ஊரில் வாழ்ந்து வந்தார். அந்த ஊருக்கு எலிசா தீர்க்கர் சென்றார் (II இராஜா 4:8) அப்பெண்ணின் பெயர் குறிப்பிடப்படாததால் 'சூனேமியாள்' என்று அந்த ஊரை குறிப்பிட்டு அழைக்கப்படுகிறார். (4:25)

**விருந்தோம்பல் செய்தவர் :**

சூனேமியாள் உள்ளார்ந்த மனத்துடன் ஆண்டவரின் ஊழியர் எலிசாவை ஏற்றுக் கொண்டு, அவருக்கான அன்பின் உபசரிப்பை செய்து வந்தார். எலிசா தீர்க்கர் அந்த ஊர் வழியே பயணிக்கின்றபோதெல்லாம் இந்த உபசரிப்பு நடைபெற்றது. எலிசா உணவருந்தி, இளைப்பாறிச் சென்றார். (4:8)

**நற்சான்று பகிர்ந்தவர் :**

சூனேமியாள் தனது கணவரிடம், நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற ஆண்டவரின் ஊழியரான எலிசா 'பரிசுத்தவான்' என்று சான்று பகிர்கிறார். (4:9) சூனேமியாள் ஆண்டவரின் ஊழியரைக் குறித்ததான தெளிவான புரிதலும் அதற்கான அறிக்கையுமே இந்த நற்சான்று ஆகும்.

**நிறைவையேப் பேசினவர் :**

எலிசா தீர்க்கர் சூனேமியாளை அழைத்து, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட போது, சூனேமியாள் தனக்குப் பிள்ளை இல்லாதிருந்தும் (4:14) தனக்கான குறையைக் கூறாமல், பெரிய மனத்துடன் என் மக்களின் நடுவில் நான் சுகமாய் வாழுகிறேன் என்று (4:13) நிறைவையேப் பேசினவர்.

**அற்புதம் பெற்றவர் :**

சூனேமியாளுக்கு பிள்ளை இல்லை, அவர்தம் கணவரும் வயது முதிர்ந்தவர் (4:14) இந்நிலையில் எலிசா, சூனேமியாளை அழைத்து உனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றார். அப்படியே சூனேமியாள் வாழ்வில் நிகழ்ந்தது (4:16,17) ஆண்டவரின் வல்லமையால் அற்புதம் நிகழ்ந்தது.

**அற்புதம், அற்புதம் :**

வயது முதிர்ந்த காலத்தில் சூனேமியாளுக்குப் பிள்ளைப் பிறந்ததே அற்புதம். (4:14, 17) அந்த மகன் தலைவலியால் ஒரு நாள் இறந்து போனார். (4:20) ஆண்டவரின் தீர்க்கர் எலிசாவின் காலைப் பிடித்துக் கொண்டு தன் மகன் இறந்தச் செய்தியை தெரிவித்தார். (4:27,28) இறந்து போன மகன் திரும்ப உயிர் பெற்று எழுந்தான் (4:35) அற்புதத்தின் மேல் அற்புதம் சூனேமியாள் வாழ்வில் நடந்தேறியது.

**நிறைவாக**

NAME இல்லாத சூனேமியாள் FRAME–க்குள் வந்துவிட்டார். அதாவது சூனேமியாள் என்றப் பெண்ணின் வாழ்வு முறை பல தலைமுறைகள் கடந்தும் இன்றும் நாம் பேசுகிறோம்.

சூனேமியாளைப் போன்று அனைவரிடத்திலும் அன்புடன் வாழுகிற, உபசரிக்கிற நிலைமையை ஆண்டவர் எதிர்ப்பார்க்கிறார். பிறரைக் குறித்து நல்லவற்றைப் பேசவும், பிறரால் நற்சான்று பெறவும் தக்க கிறிஸ்துவ வாழ்வையே ஆண்டவர் விரும்புகிறார். சூனேமியாள் தனக்கு பிள்ளை இல்லாத நிலைமையில் 'நான் என் மக்கள் நடுவில் சுகமாய் வாழுகிறேன்' என்று தீர்க்கர் எலிசாவிடம் கூறினார். எப்போதும் குறைவை அல்ல, நிறைவையே பேச அழைக்கப்படுகிறோம். அப்படி வாழும் போது ஆண்டவரால் அற்புதத்தையும், ஆண்டவரின் ஆசியையும் பெறமுடியும். அதுவும் அற்புதத்தின் மேல் அற்புதம் பெற்று நிறைவாழ்வு வாழ முடியும். சிந்தியுங்கள், செயல்படுங்கள். ஆண்டவர் தாமே ஆசிர்வதிப்பாராக, ஆமென்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . B . Velankanni*





# Walk *with* The Lord

Dear brother and sister in Christ, greeting in the name of the Lord and Saviour Jesus Christ. I take this opportunity to share the word of the Lord. We have new challenges in each new day. On some days these challenges are easy for us to overcome but often we find it difficult to overcome these challenges. We get weary when we must face these kinds of challenges on a day-to-day basis. When this continues, we lose hope, get frustrated and we start to show our anger on others and grumble against others and to our Lord. I am sure we all have gone through this stage or going through this stage. But I want to tell you that we are not going through this alone. We have our Redeemer, who is walking with us through out the challenges that we are undergoing, and He will not allow these challenges to overcome us. I would like to share a story of a person, named Jacob, who had to do face different challenges in his life daily and how he overcame them with the help of our Lord.

Many times, I (Jacob) told God that I couldn't do it- I simply could not keep running the painful race that He had allowed into my life. I do not want to experience these betrayals and loss (challenges) one more day and I do not want to face life alone. I just couldn't keep running and there is no way I could walk alone daily and make it to the end. At this moment, I heard the gentle whisper of our Lord. Words of encouragement were sown in my heart which started to bring a change in my life.

He reminded me (Jacob) that I didn't need to run the whole race alone today. All I must do was make it through the next moment and the challenges that stand ahead of us and then the next. In His strength, I can make through one step at a time or challenges, every day.

We face things we have never experienced before. Sometimes they seem to stretch endlessly in front of us.

May I encourage dear brothers and sisters in Christ not to look at all the days and the challenges that are waiting for us in the days, months, and years. But just look at the next moment and live in the Grace and strength that our Saviour provides us. When we have this long road ahead of us, don't look all the way to the finish line. Set a small goal and strive to conquer it. You will overcome the challenges one by one at a time. For the word says, "And He said unto me, My grace is sufficient for thee: for my strength is made perfect in weakness" (2nd Corinthians 12:9).

God's pace is prefect and when we walk with Him, we keep His perfect pace. We don't have to run ahead, and we don't have to fall behind. Ask God to guide you in every step daily so that you can walk with Him in the path of peace. Your Heavenly Father know the plans that He has for you- plans to prosper, plans for welfare and not for calamity, to give you future and a hope. The Lord will accomplish what concerns you. His loving kindness is ever lasting. He will not forsake the works of His hands. So, trust in Him and face these challenges that are waiting for you with the trust that "I am not walking through these challenges alone but along with my Redeemer and Saviour Lord Jesus Christ".

ARTICLE BY

## Mr. Praveen Paul

MEN'S FLLOWSHIP





# அவர் நாமம் அதிசயமானவர்

Article by
SIS. MALINI PRINCE

நமது தேவன் அதிசயமானவர். ஏசாயா 9:6-ன் படி அவர் நாமம் அதிசயமானவர். அப்படியானால் அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ? நம்முடைய பிரச்சனை எதுவாயிருப்பினும் (EG.குடும்ப ஆசீர்வாதமோ, கடன் பிரச்சனையோ, வேலையின்மையோ, விசா பிரச்சனையோ, ஏதாயினும்) அதை சந்திக்க, மாற்ற அவரால் கூடும். அவரால் எல்லாம் கூடும்.

நாமும் நமது சூழ்நிலைகளை பார்க்காதபடி, சூழ்நிலைகளை ஆண்டு, ஆளுகை செய்கிற தேவனையே எப்பொழுதும் எல்லா சூழ்நிலைகளிலும் நோக்கி பார்த்து அவர் மேல் நம்பிக்கையாய் இருக்க வேண்டும்.

ஏனெனில் அவர் நம்மை படைத்த விதம் அதிசயம். வல்லமையில், குணமாக்குவதில், கிருபையில், வார்த்தையில், போஷிப்பதில், தமக்கு பிரியமான ஊழியக்காரரின் பேச்சைக் கேட்பதில், அவர் வருகையில் அதிசயம்.

நான் உன்னை அதிசயம் காண பண்ணுவேன் என்று வாக்கு உரைத்தவர் வாக்கு மாறாதவர்

ஒரு அழகான பாடல் இப்படி சொல்கிறது:

**உன்னை அதிசயம் காணச் செய்வேன்**
**நீ அற்புதம் கண்டிடுவாய் ...**
**என்று வாக்குரைத்தார் தேவன்**
**அதை நிறைவேற்ற வந்திடுவார்**
**ஒளி பிறக்கும் அதிசயம் நடந்திடுமே**
**குறைகள் எல்லாம் நிறைவாகும் அதிசயமே!**

## › படைப்பில் அதிசயம் :

வானம், பூமி, ஜலம், இரவு, பகல், ஆகாய விரிவு, வெட்டாந்தரை, விதைகள், ஊரும் பிராணிகள், மிருகங்கள், பறவைகள், இவைகளை எல்லாம் ஆழ அவர் சாயலாய் மனுஷனை சிருஷ்டித்தார் சங்கீதம் 136:4-9. நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன், சங்கீதம் 139:14.

## › வல்லமையில் அதிசயம் :

அதிசயமாய் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினார். செங்கடலை இரண்டாகப் பிளந்தார். மேக ஸ்தம்பமாகவும் அக்கினி ஸ்தம்பமாகவும் நடத்தினார். அதே தேவன் இன்றைக்கும் நம்முடைய

பிரச்சனைகளை பார்த்து: இரையாதே! அமைதலாயிரு என்று சொல்ல முடியும். அவருடைய வல்லமை குறைந்து போகவில்லை. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

### குணமாக்குவதில் அதிசயம் :

இயேசு ஊழியம் செய்த நாட்களில் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார். 12 வருடமாய் பெரும்பாடுள்ள ஸ்திரி, திமிர்வாதக்காரன் மத்தேயு 9:2,20, குஷ்டரோகிகள் மத்தேயு 8:2, நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன், குருடர்கள் என பல அற்புதங்களை செய்தார். இன்றைக்கும் யேஹோவா ரப்பா நம் வியாதிகளை குணமாக்க அவர் வல்லமை உள்ளவர்.

### கிருபையில் அதிசயம் :

கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இது தேவனுடைய ஈவு. கிரியைகளினால் அல்ல, கிருபையினால் எபேசியர் 2:8. அவர் அனுதினமும் நம்மை கிருபையாய் நடத்துகிறார். கிருபையால் நிலை நிற்கிறோம்: தேவ கிருபையால் நிலை நிற்கிறோம்

### போஷிப்பதில் அதிசயம் :

- இஸ்ரவேல் மக்களுக்கு மன்னாவை தந்து போஷித்தார்.
- ஆகாயத்து பறவைகளையும் போஷிக்கிறார். நம்மை போஷிப்பதில் அவர் அதிசயமானவர்.
- 1இராஜாக்கள் 17:6, காகத்தைக் கொண்டு எலியாவை போஷித்தார். ஏசாயா 58:11, ஆத்மாவை போஷித்து திருப்தியாக்கி நித்தமும் நடத்துவார்.
- 5 அப்பம் 2 மீன்- மீதியான துணிக்கைகள்.

### தம் ஜனங்களின் சத்தத்தை (ஜெபத்தை) கேட்பதில் அதிசயம்:

- யோசுவாவின் பேச்சை கேட்டு சூரியனை நிறுத்தினார்.
- எலியாவின் ஜெபத்தை கேட்டு மழை பெய்யவும், மழை பெய்யாத படிக்கும் அற்புதம் செய்தார்.
- எலிசாவின் சத்துருக்களுக்கு கண் மயக்கம் உண்டாக்கினார்.
- சிம்சோன்

நாம் அவர் சித்தம் அறிந்து அவருக்கு பிரியமாய் நடக்கும் போது, அவர் நம் ஜெபத்தை கூட கேட்பார்

### அவர் வருகையில் அதிசயம்:

- எலியாவை சுழல் காற்றினால் எடுத்துக்கொண்டார்.
- ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்த போது எடுத்துக் கொள்ளப்பட்டார்.
- நாமும் இரகசிய வருகைக்கு ஆயத்தமாவோம்.


WOMEN'S Fellowship



# ஜனங்களே, கவனியுங்கள்


ஏசாயாவின் மூலமாக தேவன் இவ்விதமாய் அழைக்கிறார். இந்த உலகத்தில் ஒருவர் மாத்திரமே எல்லாவற்றிற்கும் அதிபதியானவர், அவர் தேவாதி தேவன். அவரிடத்தில் நாம் கேட்கும்படியாக கிட்டிச்சேர வேண்டுமென்று அழைக்கிறார். மேலும் நாம் கவனத்தோடு அவருக்குச் செவிக்கொடுப்பது அவசியம்.

ஏனென்றால் தேவன் பேசுகிற அவருடைய வார்த்தைகள் நித்தியமானவைகள். இந்த உலகத்தில் தேவனுடைய வார்த்தை மட்டுமே சகல அதிகாரத்திற்கும் ஆளுகைக்கும் உட்பட்டது. தேவனுடைய வார்த்தைக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதே இந்த சிருஷ்டிப்பின் நோக்கமாயிருக்கிறது. இந்த தேவனுடைய அழைப்பை நிராகரிக்கும் பொழுது அதின் விளைவு பயங்கரமானது என்பதை குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.



**“சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின்மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது”**

—ஏசாயா 34:2



**“ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்; ஜனங்களே, கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது”**

—ஏசாயா 34:1

அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். அவருடைய கோபத்திற்கு முன்பாக யார் நிற்கக் கூடும்? தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம்.

அதுவே நம்முடைய வாழ்க்கையின் பாதுகாப்பிற்கு ஏற்ற வழிமுறையும் ஏற்ற இடமுமாயிருக்கிறது. தேவனிடத்தில் தன்னைத் தாழ்த்துகிறவர்களை அவர் கிருபையாய் உயர்த்துகிறார், காத்துக்கொள்கிறார்.

அவரையே கிட்டிச்சேருவோமாக.

YOUTH FELLOWSHIP

# Manna Article

Elfina




Lord's Prayer by Eric Aaron




Class - Intermediate

Teacher - Mrs. Augusta Lawrence

MAY

# WINNERS

## Find the way

- Liana
- Regan Shan
- Jania Preni
- Johan Sanjo
- Chris Gabriel
- Jessica
- Bernicia
- Patricia
- J.Joshua

## Word Search

- Johan Sanjo
- Jaaon Eric
- Jessica
- Sherin Shah
- Patricia
- J.Joshua
- Eric Aaron

- smyrna syntyche

## Kids Colouring

- Bernicia
- Jania Preni
- J.Johana
- Jessica
- Smyrna Syntyche
- Chris Gabriel
- Patricia
- Liana
- Regan Shan

Well Done!

## Cross Word

- Jason Eric
- Sherin Shah
- Johan Sanjo

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** **Your name / Quiz, type / Month - Year**

**To Church Email:** **csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# LEVITICUS: 1-13

## லேவியராகமம்: 1–13

JULY '23 - QUESTIONS




*1.* சர்வாங்க தகன பலியை பலி பீடத்தில் எங்கே கொல்லக்கடவன்?

*2.* கர்த்தருக்கு தகன பலியாக எவற்றை தகனிக்க வேண்டாம்?

*3.* கர்த்தருக்கு பலியிடுவதிலே எவற்றை நீங்கள் புசிக்கலாகாது?

*4.* சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் செய்த பாவத்திற்காக எதை பலியாக செலுத்த வேண்டும்?

*5.* பாவ நிவாரணத்துக்காக இரண்டு புறா குஞ்சுகளையாவது கொண்டுவர இயலாதவன் எதைக் காணிக்கையாக கொண்டு வர வேண்டும்?

*6.* சர்வாங்க தகன பலியானது எவ்வளவு நேரம் எரிய வேண்டும்?

*7.* தீட்டுள்ள ஒருவன் சமாதான பலியைப் புசித்தால் என்ன ஆவான்?



*8.* ஆசாரியரின் தலைப்பாகையின் பொற்பட்டத்தில் எழுதப்பட்டது என்ன?

*9.* கர்த்தருடைய அக்கினி புறப்பட்டு பலிபீடத்தின் மேல் என்ன செய்தது?

*10.* ஆரோனுக்கு மீதியாய் இருந்த குமாரர்கள் யார்?

*11.* ஆகாபு என்பது என்ன?

*12.* பெண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரீக்கான உதிர ச் சுத்திகரிப்பு நாள் எத்தனை?

*13.* குஷ்டரோகி பாளையத்துக்கு புறம்பே இருந்தவனாய் என்னவென்று சத்தமிட வேண்டும்?

### மே - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யாத்: 31.15 | 2. யாத்: 32.2 | 3. யாத்: 33.6 | 4. யாத்: 34.33 | 5. யாத்: 35.26
6. யாத்: 36.20 | 7. யாத்: 37.4 | 8. யாத்: 38.22 | 9. யாத்: 39.2 | 10. யாத்: 40.26

திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஜெயின் ராஜவேல்,
செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா, திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி.பமிலா ரேச்சல் டேனியல்,
திருமதி. ஜெயந்த பெல்பர் ஜான், திருமதி.ஜமுனா ரானி


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம்.
தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / MAY'23 / Send to: csitcalain@gmail.com
056 766 8348

Name:

Date:

# Kids Coloring




Find the Way

Name : ................................................

# THE STORY OF DAVID
# DAVID'S BEST FRIEND

Quick! Help David run from King Saul.



# WORD SEARCH

Find the words listed below

## Bible Characters

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | U | A | Z | H | X | J | T | E | Q | U | T | M | T | U | T | P |
| I | T | O | Y | A | Y | O | E | A | H | L | Z | B | L | J | T | F |
| L | U | H | D | O | M | J | M | J | O | N | A | H | I | E | C | R |
| U | M | I | A | N | X | K | T | H | B | G | Z | J | A | H | C | P |
| I | R | Q | J | I | O | A | B | R | A | H | A | M | G | O | P | N |
| O | A | Z | G | P | A | T | S | P | K | B | N | S | I | V | Q | N |
| D | L | A | H | P | E | S | O | J | A | G | G | H | B | A | X | O |
| D | L | I | U | K | S | M | I | S | L | K | G | R | A | H | N | Z |
| G | U | R | N | O | N | D | A | V | I | D | A | Y | G | O | P | I |
| N | A | N | M | N | I | M | A | J | N | E | B | Q | P | A | K | B |
| P | P | K | A | U | X | O | X | B | G | N | D | E | Q | J | T | T |
| Q | C | U | S | U | S | E | J | I | K | E | N | V | B | V | F | U |
| Z | R | X | H | J | R | Y | K | S | L | U | R | E | H | T | S | E |
| U | Q | E | X | X | N | G | K | V | A | C | C | H | T | U | R | W |
| X | B | V | T | D | Y | U | W | G | S | M | A | D | A | H | J | J |
| O | R | S | A | E | F | A | C | Z | L | E | U | M | A | S | U | A |
| B | O | C | A | J | P | W | W | P | Z | I | B | V | L | N | C | W |




Name : ..........................................................................

**CROSS WORDS**

Name : ..........................................................................

# Bible Characters





**Across**

**6.** What bible character gave Samuel a little sleeveless coat each year?

**8.** What was Samson's fathers name?

**9.** What bible character prayed not for riches, but for an obedient heart?

**11.** Who began to sink because they gave way to doubt?

**Down**

**1.** Who lived to be 950 years old?

**2.** Which son of Saul became David's close friend?

**3.** Who went with Isaiah to deliver a message to King Ahaz?

**4.** What bible character played the musical instrument tambourine?

**5.** Who was thrown into a lions' pit because he prayed when ordered not to?

**7.** Who supported his ministry by making tents?

**10.** Who did Jehovah inspire to write the bible books Genesis, Exodus, Leviticus, Numbers, Deuteronomy, and Job, as well as Psalm 90 and perhaps 91?

# JULY - 2023

| | |
|---|---|
| 01-JULY | Mr. A.Ravichandran |
| 04-JULY | Mastr. A. Eric Aaron S/o Mr. Antony Jesu Rajan |
| 05-JULY | Mrs. Jessy Beula John Joseph |
| 05-JULY | Mastr. Joshuva Koshy S/o Mr. Kingsly Stoobert |
| 05-JULY | Baby. Isabella Jane D/o Mr. Prince Emmanuvel |
| 05-JULY | Mr. Thanu Lingam |
| 07-JULY | Mrs. Hepsi Bai Nesamony |
| 08-JULY | Mr. Amala Charles |
| 09-JULY | Mrs. Gold Jency R |
| 10-JULY | Mastr. Eric Jayden S/o Mr. Jason Samuel |
| 11-JULY | Baby. Elianna Kacy D/o Mr. Praveen Paul |
| 11-JULY | Mastr. Aishlin Babu S/o Mr. Babu Abraham |
| 13-JULY | Mr. Bhaskar Rajaram |
| 13-JULY | Mrs. Pamela Rachel Daniel |
| 14-JULY | Mr. Jason Samuel |
| 15-JULY | Mr. Sankaran Chinniyan |

*Wish you many more happy returns of the day God bless you all*

# JULY - 2023

| | |
|---|---|
| 19-JULY | Mrs. Sangeetha |
| 21-JULY | Mr. Franklin Christopher |
| 23-JULY | Mr. Ravindra |
| 25-JULY | Mrs. Angelin Nalini |
| 25-JULY | Mr. Timotheus Dill Suresh |
| 26-JULY | Mrs. Roselin Tamil Selvi |
| 28-JULY | Mrs. Beeta Christopher |
| 28-JULY | Mr. David Sornabalan |
| 29-JULY | Mastr. Dennis Roger S/o Mr. D.Rajavel |
| 29-JULY | Mastr. Mervin Samuel S/o Mr. Lawrence Gambeeram |
| 29-JULY | Baby. Jania Preni D/o Mr. Belfer John Sigamony |
| 29-JULY | Mastr. Jaidan Suji Kumar S/o Mr. Suji kumar K.S |
| 30-JULY | Baby. Bernicia Leenus Obed D/o Mr. Leenus Patrick |
| 31-JULY | Mr. Kingsly Stoobert |
| 31-JULY | Mrs. Biji Kumari.G.S |

*Wish you many more happy returns of the day God bless you all*



JULY

# Wedding ANNIVERSARY

**02-JULY** Mr. Leenus Patrick Obed
&
Mrs. Iswarya Obed

**02-JULY** Mr. Arun Kumar.V
&
Mrs. K.Santhiya

**03-JULY** Mr. Ashok Kumar S
&
Mrs. Fhilomina

**04-JULY** Mr. A.S.Kannan
&
Mrs. Lavanya Kannan

**06-JULY** Mr. Arunkumar.K
&
Mrs. S.Banu Priya

**08-JULY** Mr. George Rose
&
Mrs. Anitha Geroge

**09-JULY** Mr. Franklin Christopher
&
Mrs. Catherine Judith Franklin

**14-JULY** Mr. C.Rajesh Anbu
&
Mrs. D.Mercylin Latha

**12-JULY** Mr. David Livingston
&
Mrs. Beula Rani Livingston

**25-JULY** Mr. Sankaran Chinniyan
&
Mrs. Kalyani Sankaran

















# Children's Bible School - 2023



**Children's Bible School - 2023**




**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**

**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**